பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

04 07 2025 **FRIDAY** 12 40 **PM** ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- டிரினிடாட் டொபாகோ-வில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர், இந்தியாவின் கலாச்சார பாரம்பரியங்களை தொடர்ந்து பின்பற்றி வருவது பாராட்டத்தக்கது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடமாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

- நாட்டின் மிகப் பெரும் சரக்கு போக்குவரத்து கட்டமைப்பாக அஞ்சல் துறை திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

- தமிழக அரசின் 'ஊட்டச்சத்து வேளாண் இயக்கம்' என்ற புதிய திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்

- ஆசிய பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>>><<<<<<<<<

**Trinidad Tobago**-வில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர், இந்தியாவின் கலாச்சார பாரம்பரியங்களை தொடர்ந்து பின்பற்றி வருவது பாராட்டத்தக்கது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமது ஐந்து நாடுகள் பயணத்தின் இரண்டாம் கட்டமாக டிரினிடாட் டொபாகோ சென்ற அவரக்கு தலைநகர் **Port of Spain-**ல் அந்நாட்டு பிரதமர் திருமதி. **Kamla Persad Pissessar** விருந்தளித்து சிறப்பித்தார்.

அப்போது, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அயோத்தி ராமர் கோவிலின் மாதிரி, சரயு நதியின் புனித நீர் மற்றும் பிரயாக்ராஜ் மகாகும்பமேளாவின் போது சேகரிக்கப்பட்ட புனித நீர் அடங்கிய கலசங்களை திருமதி. **Kamla Persad-**க்கு பரிசளித்தார்.

இதுகுறித்து, பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ராமர் கோவிலும், சரயு நதியின் புனித நீரும் இந்தியா – **Trinidad Tobago** இடையேயான ஆழமான கலாச்சாரம் மற்றும் ஆன்மிக உணர்வுகளின் அடையாளமாக திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த விருந்தின் போது, கல்வாழை இலையில் உணவு பரிமாறப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ள பிரதமர், இது இந்திய பாரம்பரியத்தைக் கொண்ட **Trinidad Tobago** மக்கள், கலாச்சாரத்திற்கு அளிக்கும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டின் பண்டிகைகள் மற்றும் விழாக்களின் போது, இந்த இலையில் உணவு பரிமாறப்படுவது வழக்கமாக உள்ளது என்றும் திரு. நரேந்திர மோடி அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**Trinidad Tobago** நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றவுள்ள பிரதமர், தமது பயணத்தை முடித்துக் கொண்டு அடுத்தகட்டமாக அர்ஜென்டினா செல்கிறார்.

இதன்மூலம், கடந்த 57 ஆண்டுகளில் அர்ஜென்டினா செல்லும் முதலாவது இந்தியப் பிரதமர் என்ற சிறப்பை திரு. நரேந்திர மோடி பெறுகிறார்.

அங்கு அந்நாட்டு அதிபர் திரு. **Javier Milei** உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது குறித்து பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>>><<<<<<<<<**

சுவாமி விவேகானந்தரின் நினைவு நாளையொட்டி, பல்வேறு தலைவர்களும் புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், விவேகானந்தரின் சிந்தனைகளும், சமூகப் பார்வையும் தற்காலத்திலும் வழிகாட்டியாக திகழ்வதாக கூறியுள்ளார்.

நமது வரலாறு மற்றும் கலாச்சார பாரம்பரியத்தின் மீது அவர் மிகுந்த நம்பிக்கையும், பெருமிதமும் கொண்டிருந்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சேவை மற்றும் இரக்க குணத்துடன் செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் சுவாமி விவேகானந்தர் வலியுறுத்தியுள்ளதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், இளைஞர்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்திய சுவாமி விவேகானந்தர், ஆன்மிக உணர்வுகளை முன்னெடுத்துச் செல்வதில் நாட்டு மக்களுக்கு உத்வேகம் அளித்தவர் என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்நாளையொட்டி தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஆன்மிக சிந்தனைகள் மூலம் உலக அமைதியை வலியுறுத்தி வந்தவர் சுவாமி விவேகானந்தர் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒழுக்க நெறிக்கும், சகோதரத்துவத்திற்கும் சான்றாக வாழ்ந்த அவர், பாரதத்தின் வளர்ச்சியானது இளைஞர்களின் துடிப்புமிக்க திறனை வெளிப்படுத்துவதில் தான் உள்ளது என்பதை தீவிரமாக நம்பியவர் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<<<

கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடமாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில், குஜராத், ஹிமாச்சலப்பிரதேசம், ராஜஸ்தான், உத்ராகண்ட் மற்றும் சத்திஷ்கட் மாநிலங்களின் முதலமைச்சர்களை தொடர்பு கொண்டு, வெள்ள பாதிப்புகள் குறித்து கேட்றிந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இம்மாநில மக்களுக்கு உதவுவதற்காக தேசிய பேரிடர் மீட்புப் படையினர், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், தேவைப்பட்டால் கூடுதல் படைகள் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் அந்தப் பதிவில் உறுதியளித்துள்ளார்.

இதனிடையே, ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், அஸ்ஸாம், அருணாச்சலப்பிரதேசம், கோவா, கடலோர கர்நாடகா உள்ளிட்ட பகுதிகளில் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத், உத்தரபிரதேசம், பீகார், ஜார்க்கண்ட் மற்றும் ஹிமாச்சலப்பிரதேசத்தின் ஒரு சில இங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<<<

நாட்டின் மிகப் பெரும் சரக்கு போக்குவரத்து கட்டமைப்பாக அஞ்சல் துறை திகழ்வதாக தொலைத்தொடர்பு துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

ஆகாஷ்வாணி செய்திப்பிரிவுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், நாடுமுழுவதும் ஒரு லட்சத்து 64 ஆயிரத்திற்கும் அதிகமான சேவை மையங்களைக் கொண்டுள்ள அஞ்சல் துறை, வழக்கமான தபால் போக்குவரத்து மட்டுமின்றி, சரக்கு போக்குவரத்தையும் மேற்கொண்டு வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள ஏதுவாக, அஞ்சல் துறை ஊழியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தபால்களை நாட்டின் குக்கிராமங்களிலும் துல்லியமாக கொண்டு சேர்க்கும் வகையில், புவி குறியீடு சார்ந்த **DigiPIN** முறை விரைவில் தொடங்கப்படும் என்றும் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<<<

தமிழக அரசின் 'ஊட்டச்சத்து வேளாண் இயக்கம்' என்ற புதிய திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை, தலைமைச்செயலகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், திட்டத்தை தொடங்குவதன் அடையாளமாக பயனாளிகளுக்கு காய்கறி விதை, பழச்செடிகள் மற்றும் பயறுவகை தொகுப்புகளை அவர் வழங்கினார்.

திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் சுமார் 10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதி, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் 25 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட கால்நடை மருத்துவமனை, மருந்தகங்கள் உள்ளிட்ட கட்டிடங்களையும் முதலமைச்சர் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

>>>>>>><<<<<<<<<

தமிழகத்தின் சிவகங்கை அருகேயுள்ள இந்தோ – திபெத் எல்லை பாதுகாப்புப் படை பயிற்சி மையத்தில் போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இங்கு பயிற்சி பெறும் வீரர்கள், தமிழக கடலோரப் பகுதியில் வரும் 7 ஆம் தேதி முதல் ஒரு வார காலத்திற்கு விழிப்புணர்வு பேரணி நடத்தவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட்- முருகன் 48 செகண்ட்ஸ்)

**>>>>>>><<<<<<<<<**

சட்டவிரோத பணப்பரிவர்த்னை குற்றச்சாட்டின் பேரில், ஜார்க்கண்ட் மாநில முன்னாள் அமைச்சர் திரு. **Yogendra Sao** மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறையினர் இன்று சோதனை மேற்கொண்டுள்ளனர்.

மணல் கொள்ளை தொடர்பான வழக்கு விசாரணையின் ஒரு பகுதியாக, ஹசாரிபாக் மற்றும் ராஞ்சி உள்ளிட்ட எட்டு இடங்களில் இன்று அதிகாலை முதல் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**>>>>>>><<<<<<<<<**

ஆப்கானிஸ்தானை ஆளும் தாலிபான் அரசை, ரஷ்யா முறைப்படி அங்கீகரித்துள்ளது.

ரஷ்யாவுக்கான ஆப்கானிஸ்தான் தூதருக்கான நியமனக் கடிதங்களை பெற்றுக் கொண்டதன் மூலம், தாலிபன் அரசை அங்கீகரித்த முதல் நாடாக ரஷ்யா திகழ்கிறது.

இதுதொடர்பாக ரஷ்யா வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பாதுகாப்பு, தீவிரவாத எதிர்ப்பு மற்றும் போதைப்பொருள் கடத்தல் தடுப்பு உள்ளிட்ட அம்சங்களில் ரஷ்யா, ஆப்கானிஸ்தானுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிசக்தி, போக்குவரத்து, வேளாண்மை மற்றும் கட்டமைப்பு வளர்ச்சி உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

**>>>>>>><<<<<<<<<**

ஆசிய பாரா வில்வித்தைப் போட்டியில், இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கம் வென்றது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின், ஆடவர் இரட்டையர் பிரிவில், **Naveen - Nurudin** இணையும், மகளிர் இரட்டையர் பிரிவில் **Bhawna – Pooja** இணையும் இந்த பதக்கங்களை வென்றன.

இப்போட்டியில் மற்றொரு ஆடவர் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் **Harvinder - Vivek Chikara** இணையும், ஆடவர் குழுப் பிரிவில் **Rakesh – Shyam Sundar** இணையும், மகளிர் குழுப் பிரிவில் **Sheetal Devi - Jyoti** இணையும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

**>>>>>>><<<<<<<<<**

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3வது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஓவலில் இப்போட்டி இரவு மணி 11.05க்கு தொடங்குகிறது.

**>>>>>>><<<<<<<<<**

ரொமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சிந்தாந்த் பாந்தியா – பல்கேரியாவின் **Alexander Bonski** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>>><<<<<<<<<**

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Krisha Mahendren** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>>><<<<<<<<<**

தமிழ்நாடு ப்ரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் சேப்பாக்கம் அணி இன்று திண்டுக்கல் அணியை எதிர்கொள்கிறது.

**>>>>>>><<<<<<<<**